IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II SRIVILLIPUTTUR
C.C. No. 385/2021

**PW - 1 Cross**

Name: திருமதி. சகுந்தலா

W/o : முனியசாமி

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th day of June 2025.

Signature of Witness

04.06.2025

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன்கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை**

எனது நகை காணாமல் போன அன்று எனது மகனை வைத்துதான் புகார் மனு கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த புகார் மனுவானது நான் சொல்லச்சொல்ல எனது மகனால் எழுதப்பட்டது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் நான் அளித்த புகாரில் முப்பதாயிரம் பெருமானமுள்ள மூன்று பவுன் தங்க செயினை எதிரி அறுத்து விட்டு சென்று விட்டார் என்று தெரிவித்துள்ளோம் என்றால் சரிதான். நான் எனது முதல் விசாரணையில் திருடுபோன செயினானது பித்தளை என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும் காவல் துறையினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க எதிரி மீது பொய்யான புகார் ஒன்றை நான் கொடுத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.